ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2317/56 - 2023 පෙබරවාරි මස 01 වැනි බදාදා - 2023.02.01

2317/56 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு - 2023

2023 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பு அலுவல்கள் 2023, பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாக திருத்தியமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் குறித்துரைக்கின்றேன்.

02. தற்போது நடைமுறையிலிருக்கும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு. 2022 (1) 2022 (2) மற்றும் 2022 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் (இதனகத்துப் பின்னர் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு என அறிமுகப்படுத்தப்படும்) அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பதிவு செய்யும் அலுவலர்களால் அவர்களது அலுவலகங்களிலும், கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்படும்.

| *இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள்* | *காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள்* |
|---|---|
| மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | தேர்தல் மாவட்டத்திற்குரிய /நிருவாக மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பின் மொத்தப் பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்கள் | கிராம அலுவலர் பிரிவின் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் பாகங்கள் |

03. இதற்கமைய, ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்தில் வாக்காளரொருவராகுவதற்குத் தகுதியுள்ள அனைவருக்கும் தமது பெயர் மேற்கூறப்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்படும் தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். இது தவிர www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பரீட்சித்துக்கொள்ளவும் முடியும்.

1A - G 38746 — 21 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*04. 2023 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*05. தற்போது செல்லுபடியாகும் 2022.10.31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு; 2022.11.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு ; 2022.11.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு ஒன்றிணைக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக ஒன்றிணைந்த பட்டியல்கள் தயாரிக்கப்படும்.*

*06. ஒவ்வொரு கிராம அலுவலரும் அந்தப் பிரிவின் தேருநர்களை (வாக்காளர்களை) கணக்கெடுக்கும் அலுவலர்களாக நடவடிக்கை மேற்கொள்வார்கள். தேவைக்கேற்ப விசேட கணக்கெடுப்பு அலுவலர்களையும் ஈடுபடுத்த முடியும்.*

*07. கணக்கெடுப்பு அலுவலர் சகல வீடுகளுக்கும் வருகை தருவதுடன் அவர் கொண்டுவரும் ஒன்றிணைந்த தேருநர் (வாக்காளர்) இடாப்பில் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்தி பிரதான குடியிருப்பாளர் கையொப்பத்தை இடுதல் வேண்டும்.*

*08. எவரேனும் வாக்காளரொருவர் 2022 ஆம் ஆண்டிற்கான செல்லுபடியாகும் தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் 2023 ஆம் ஆண்டிலும் 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பில் நீங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் முகவரியில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக பிரதான் குடியிருப்பாளர் ஒன்றிணைந்த இடாப்பில் கையொப்பமிடுவதனைத் தவிர ஏனைய எந்த விதமான படிவத்தையும் பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடு இல்லையென்ற விடயத்தைக் கவனத்திற்கொள்ளவும். எவரேனுமொருவர் 2022 ஆம் ஆண்டில் பதியப்படாதிருப்பின் அல்லது 18 வயதைப் பூர்த்தி செய்தலின் அடிப்படையில் முதற் தடவையாக வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்படுவதாயின் அல்லது 2022 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியை மாற்றியமைக்க வேண்டுமாயின் அல்லது 2023 ஆம் ஆண்டில் வாக்காளரொருவராகப் பதிவு செய்தற்காக 2023/*ER *படிவமொன்றைப் பூர்த்தி செய்து கிராம அலுவலரிடம் கையளியுங்கள். மேலதிக விபரங்கள் 2023 /*ER *படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*09. 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளரொருவர் இறப்பெய்தல் அல்லது வதிவிடத்தை மாற்றிக்கொள்ளல் அல்லது வேறேதும் காரணத்தினால் 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் அது பற்றியும் உங்களுடைய கிராம அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.*

*10. 2023.02.01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்யும் ; அதாவது 2005.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்கள் 2023 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்.*

*11. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய, 'அ' 'ஆ' பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைக் கையேற்றல் சம்பந்தமான அறிவித்தல்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப எதிர்காலத்தில் பிரசித்தப்படுத்தப்படும்.*

*12. எதிர்காலத்தில் அத்தாட்சிப்படுத்தப்படவிருக்கும் கீழ் குறிப்பிடப்படும் 06 குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்காக* YC *படிவங்களூடாக தகவல்களை சேகரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும். குறைநிரப்பு இடாப்பு காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைக் கையேற்றல் சம்பந்தமாக எதிர்காலத்தில் பிரசித்த அறிவித்தல்கள் மூலம் அறிவிக்கப்படும்.*

*12.1. 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படவிருக்கும் குறைநிரப்பு தேருநர் இடாப்பு*

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயது பூர்த்தி செய்யப்படும் காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2023 (1) | 2023.02.01 முதல் 2023.05.31 வரை | 2005.02.01 முதல் 2005.05.31 வரை |
| 2023 (2) | 2023.06.01 முதல் 2023.09.30 வரை | 2005.06.01 முதல் 2005.09.30 வரை |
| 2023 (3) | 2023.10.01 முதல் 2024.01.31 வரை | 2005.10.01 முதல் 2006.01.31 வரை |

*12.2 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு தேருநர் இடாப்பு*

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயது பூர்த்தி செய்யப்படும் காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2024 (1) | 2024.02.01 முதல் 2024.05.31 வரை | 2006.02.01 முதல் 2006.05.31 வரை |
| 2024 (2) | 2024.06.01 முதல் 2024.09.30 வரை | 2006.06.01 முதல் 2006.09.30 வரை |
| 2024 (3) | 2024.10.01 முதல் 2025.01.31 வரை | 2006.10.01 முதல் 2007.01.31 வரை |

13. வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் செல்வதனை 2023.02.15 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்வதாக அறியத் தரப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2023 பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி.

EOG 02-0365